செ.வெ.எண்.19 நாள். 07.04.2017

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 08.04.2017 **(சனிக்கிழமை)** அன்று முற்பகல் மற்றும் பிற்பகல் நடத்தப்படும் Assistant Director of Handloom and Textiles என்ற பதவிக்கான போட்டித்தேர்வு திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி மையமான மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கல்லணை, திருநெல்வேலி பள்ளியில் நடைபெறவுள்ளது மேற்படி தேர்வினை **398** நபர்கள் எழுத உள்ளார்கள். இத்தேர்வினை கண்காணிக்க துணை வட்டாட்சியர் நிலையில் 1 சுற்றுக்குழு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வு மையங்களில் தேர்வினை வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நாளன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும், பேருந்துகளை தேர்வு மையத்திற்கு சீராக இயக்கக்கேட்டும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் கல்வி நிலையத்திற்கு காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்வு எழுதுவோர் தங்களின் தேர்வு மையங்களை கண்டறிந்து முன்கூட்டியே தேர்வு எழுத வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் தேர்வு அறையினுள் செல்போன்களை எடுத்துச்செல்லக்கூடாது. தேர்வு எழுதுபவர்கள் தவிர இதர நபர்கள் தேர்வு மைய வளாகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

பெறுநர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி